

# அன்னை

## பிள்ளையின் தாலாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அன்னை

## பிள்ளையின் தாலாட்டு

பண்ணாகம், சுழிபுரம்

**திருமதி சகாதேவன்துரை இரத்தினம்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்து

இம்மலர் வெளியிடப்பெற்றது

**11.04.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் உறைவிடமாய்
ஆனந்தத்தின் இருப்பிடமாய்
இறைவனில் பற்றுள்ளவளாய்
ஈவிரக்கம் கொண்டவளாய்
உதவிகள் பல புரிந்து
ஊர் போற்ற வாழ்ந்து
என்றும் எம் நினைவிலே
ஏணியாக உயர நின்று
ஐம்பூதமாய் காத்து நின்று
ஒற்றுமையே பலமாய்
ஓருயிர் ஈருடலாய் வாழ்ந்து
ஔடதமாய் எமைக்காத்த
அன்னைக்கு ............

இது பிள்ளையின் தாலாட்டு

அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் சகாதேவன்துரை இரத்தினம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு ஜெய அமைவான மாசியதில்
பூண்ட சீர்ப் பஞ்சமித்திதிதன்னில் நீண்ட புகழ்
சகாதேவன்மனையாள் இரத்தினம் எனுமன்னை
பெற்றனளே சிவகதியைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நால்வர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதி தவள் மாடவீதி மருகனிலாவிய மைந்தர் சொல்லால்
செங்கயரால் புனை செல்வமல்கும் சீர்கொள் செங்காட்டின்குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தி ஆடும் கணபதீச்சரம் காமுறவே

## திருவாசகம்

யானே பொய்யென் நெஞ்சும் பொய்யென் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்துறு மாறே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைக்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள் ளம்குளிர
என் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்தே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோள்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராசப்பத்து

கடலென்ற புவி மீது அலையென்றவுருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாறுதற்கழலிலே
கட்டுண்டு நித்தம் நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவெனும் இரைதேடி
ஓயாது இரவு பகலாய்
உண்டுண்டு உறங்கினதைக் கண்டதேயல்லால்
ஒரு பலனும் அடைந்திலேன்
தடமென்ற இடிகரையில் பந்தபாசங்களென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடையென்று கடையென்று இனி என்னை
ஏனென்று கேளாதிருப்பதுவும் அழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராசனே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகி
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகமாகி பெண்ணுமாய் ஆணுமாகி
போதியா நிற்கும் தில்லை பொது நடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதனாடையும் மழுமானும்
அசைந்ததோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பணிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உசந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயிர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேறும் புவிமிசை மேவிய பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்க்கொரு தாலாட்டு

அருணாசலம் பெற்றெடுத்த
அருமை மகன் சின்னத்துரை
தங்கம்மா தவப்பயனாம் ரத்தினமே
நீ சிரித்தால் முத்துதிரும்
நீ நடந்த நிலம் சிலிர்க்கும்
ஊர் முழுதும் உறவென்று உறவு சொல்லித் தந்தவளே
ஊர் முழுதும் சேர்ந்தே வந்தாலும் உனக்கது ஈடாமோ
சின்னத்துரை மடி தவழ்ந்து
தேவதுரைதனை மணந்து
வெறுந்துரையை உருவாக்கி
விட்டுப்போனாயோ வேரிழந்து நிற்கின்றேன் தாயே...!
"துரை"யென்றழைக்க எனக்கினி யாரம்மா சொல்லு ?

நான் பயில நீ சிலிர்த்தாய்.
நான் முயல நீ வியர்த்தாய்.
நான் துயில நீ இசைத்தாய்.
நான் உயர நீ விழித்தாய்.
நீ எண்ணெய் ஊற்றிச் சுட்ட தோசை
ஊர்முழுதும் நெய் மணக்கும்.
உன்னை ஊற்றிச் சுட்டதனால்
உயிர் வரைக்கும் அது இனிக்கும்.
ஜென்மம் ஒன்று எனக்கிருந்தால்
பிறந்தவுடன் கண் விழிப்பேன்.
தாயாக நீ இல்லையென்றால்
தயங்காமல் உயிர் துறப்பேன்.

அன்னையே எனை அன்போடு
அரவணைத்து வளர்த்தாயே!
உன்னை நான் இப்பிறவி தன்னில்
உருகிட நினைவில் வைப்பேன்
பத்துமாதம் என்னை நீயும்
பரிவுடன் சுமந்து பெற்றாய்
குருதியைப் பாலாக்கி
குலமகளே! எனை வளர்த்தாய்
பள்ளியில் படிக்க வைத்தாய்
பலவகை உணவும் தந்தாய்
செய்யும்வகை அறிகிலேன் நான்
அனாதையாய் எனைவிட்டு
அன்னையே எங்கு போனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதிகாரர் சதியதனால்
மதிகெட்டு நலம் கெட்டு நான்
கதியத்து நிற்கையிலே
காக்கமுடியா கையறு நிலையுனக்கு
வீணாய்க்கிடந்து துரைக்கு
பாரம் கொடுக்காமல் போய் முடிவோம் என நினைந்து
விதிமுடித்து போனாயோ
விருட்சமாய் நின்றென்னைக் காத்தவளே
இரத்தினமே....!
கட்டிலில் கிடந்தாலும் வீட்டினில் நீயிருந்தால்
யானை பலமெனக்கு அது உனக்கு புரியாதா?

ஊனை உருக்கி எனக்காக வாழ்ந்தவளே
எங்கினி உனை நாம் காண்பேன்
மீண்டொரு பிறவி பெற்று
மீளவும் இந்த மண்ணில்
எம்மிடை குழந்தையாக நீயும்
இங்கு வந்து பிறக்க வேண்டும்
அன்னையே உன் நினைவால்
அனுதினம் கண்ணீர் விட்டு
கதியின்றி தவிக்கின்றேன்

கருவறையில் வித்திட்டு திங்கள் பத்து உருவளர்த்து
பருவத்தில் பாருலகு காண்பித்து கனகமுலையதனை
உரியமுறை தந்து பாலகனாய் சீலத்தே பழகவிட்டு
பெரியவனாய் பூப்பித்த அன்னையே
தாயே கற்பகமே
உன் பொற்பாதம் பணிந்த
எம் வாயே உன்நாமம் அழைத்தினிக்க நாளுமது
ஓயாத உன் அன்பலையில் மூழ்கி இருந்தோம்
தாயே கதறுகிறோம்!
தனித்து இன்று

கலங்கி நிற்கும்

**மகன், மருமகள், பேரன், பேறாமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா சொல் உருவாக்கமும் அன்னையர் தினமும்

தமிழ்மொழியில் உள்ள சொற்கள் தோன்றிய விதம் பற்றி ஆராயும் பொழுது அம்மா என்னும் சொல் எவ்வாறு உருவாகியிருக்கலாம் என்பதை இங்கே காணலாம்.

தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் எழுப்பப்பட்ட ஓசைகளின் சொற்களாகவே காணப்படுகின்றன.
கூ கூ என்று கூவிய கூகை,
குர்குர் என ஒலித்த குரங்கு,
கர் கர் என உறுமிய கரடி,
சர சரவென ஓடிய சாரை என பல எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

இவ்வகையில் அம்மா என்ற சொல்லும் இயற்கையில் தோன்றிய ஒன்றாகும். பிறந்த குழந்தை அழுவதும், சிரிப்பதுமாக வாயை மூடி மூடித் திறக்கின்றது. குழந்தை வாயைத் திறக்கும் போது அ என்ற ஒலி எழுகின்றது. வாயை மூடும் போது ம் என்ற ஒலி எழுகின்றது. ம் +அ. ம்ம - ம்ம - என்ற ஒலி மீண்டும் மீண்டும் வெளிவரும் போது அது அம்மா என்ற சொல்லைத் தருகின்றது.

அம்மா இயற்கையாகவே தோன்றிய சொல்லாகும். அம்ம, அம்மு, அம்மை போன்ற சொற்கள் அம்மா என்ற சொல்லுக்குப் பிறகு தோன்றியவைகள். தாய் என்ற சொல் ஆய் என்ற சொல்லின் நீட்சியாகும். ஆய், அம்மா பாட்டி, பாலமுதைத் தந்த ஆய் தாய் எனப்பட்டாள். குழந்தையை அள்ளி எடுத்து அணைக்கும் தாய் அன்னையெனப்பட்டாள்.
ஆய், தாய், அன்னை, அம்மை ஆகியவைகள் யாவும் பிற்காலச் சொற்களே.

## அன்னையர் தினம்

அம்மா" உலகிலுள்ள உன்னதமான வார்த்தைகளில் உயர்வானது. அந்த வார்த்தைக்கும் அந்த உறவுக்கும் எதையுமே ஈடாக வைக்க முடியாது என்பது உலகறிந்த உண்மை.

அந்த உத்தம உறவின் உன்னதங்களை நினைவு கூர உலக நாடுகள் பலவற்றில் அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது.

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அத்தனை உறவுகளினதும் ஆத்மார்த்தமான அன்பை ஒருமிக்கச் செய்து அன்பின் உச்சநிலையைக் காட்டுவது தாயன்பு மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாயன்பை ஒருகணம் உள்ளத்தில் எண்ணிப்பார்க்க உருவாக்கப்பட்டதே அன்னையர் தினமாகும். மேற்குலகத்தாரால் அறிமுகப்படுத்தப்பட்டதெனினும் அன்னையின் அன்பை எம் கண்முன் கொண்டுவருகிறது இந்த நாள்.

அமெரிக்காவில் வாழ்ந்த அன்னா மரியா ஜார்விஸ் என்ற பெண்மணியின் தாயன்பை அடியொற்றி அன்னையர் தினம் கொண்டாடப்படுவதாக பொதுவாகக் கூறப்படுகிறது.

ஒருசில நாடுகளில் அன்னையர் தினம் வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்பட்டாலும் ஒவ்வொரு வருடமும் மேமாதம் வருகின்ற இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையே பொதுவாக அன்னையர் தினமாக கொள்ளப்படுகிறது.

தூய்மையான அன்பின் மகத்துவத்தை வார்த்தைகளில் அடக்கிவிட முடியாது. அதனை யதார்த்தமாக உணர்த்துகின்ற அன்னையின் பெருமையையும் இலகுவில் வார்த்தைகளாக்கிவிட முடியாது. அது நிலவானில் ஊஞ்சல் கட்டுவது போல் பத்துப் பௌர்ணமிகள் சுமந்து, முத்துப்போல் பெற்றெடுத்துக் காத்து, காலம் முழுவதும் தனக்காகவன்றி குழந்தைகளுக்காக வாழும் தெய்வம் தாய்.

மானுட வாழ்வில் அன்பின் முதல் வெளிப்பாடாகக் கருதப்படும் தாயன்பு வாழ்வின் அந்தம் வரை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். ஓடும் இயந்திரங்களுடன் ஓடி அலைந்து தானும் இயந்திரமாகவே மாறிக் களைத்து வருகிறான் மனிதன். விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் விந்தைகள் செய்துகொண்டிருக்கிறது விஞ்ஞானம். இந்நிலையில் அன்னையருக்காக ஒருதினத்தை ஒதுக்குவதென்பது சிரமமான காரியமே.

எமது கிராமங்களில் தாய்தந்தையைப் பேணி தாயைப் பிரிந்துவாழாத நிலையே பொதுவாகக் காணப்படுவதால் அன்னையர் தினம் பற்றிப் பெரிதாக சிந்திப்பதில்லை. எனினும் எம்மை இவ்வுலகுக்கு ஈன்றெடுத்த தாய்க்காக அந்த அன்பை உணர்வதற்காக ஒருநாளை பிரத்தியேகப்படுத்துவதில் தவறில்லை என்றே கூற முடியும். பெண்ணின் அதியுயர் நிலையாக மதிப்பிடப்படும் தாய்மையின் மகத்துவத்தை அறிந்து அன்பான அந்த உறவுக்காக அன்பைப் பகிர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராண இதிகாசங்களில் அம்மா எனும் அன்பு தெய்வம்

நமது பண்பாட்டில் தாய்க்கு ஆக உச்ச ஸ்தானம். அம்மாவே தெய்வம் என்று நமது சாத்திரங்கள் கூறும். அம்மாவைப் போல எதையும் திரும்ப எதிர்பாராத அன்பு செலுத்தக் கூடியவர்கள் எவரும் இலர் என்பதே கருத்து. சம்ஸ்க்கிருத இதிகாச புராண இலக்கியங்கள் எங்கும் தாயை உயர்த்திச் சொல்லும் ஞான மொழிகள் ஏராளம் இருக்கின்றன.

### மகாபாரதம் — சாந்தி பர்வம்

*மாத்ரு'லாபே4 ஸனாத2த்வமனாத2த்வம்' விபர்யயே '*
அம்மா என்பவள் இருக்கும் வரை எவரும் அநாதை ஆவதில்லை.

*ந ச ஸோ2சதி நாப்யேனம்' ஸ்தா2விர்யமபகர்ஷதி'*
*ஸ்2ரியா ஹீனோ(அ)பி யோ கே3ஹமம்பே3தி ப்ரதிபத்3யதே"*

தாய் இருக்கும் வரை கவலை என்பதே மனிதனுக்கு இல்லை. செல்வம் அனைத்தும் அழிந்த பின்னும் அம்மா என்று அழைக்க வீட்டில் தாய் இருந்தால் போதும் அன்னம் அளிக்கும் தெய்வமே இருப்பதாக பொருள்.

*நாஸ்தி மாத்ரு'ஸமா ச்சா2யா நாஸ்தி மாத்ரு'ஸமா க3தி:'*
*நாஸ்தி மாத்ரு'ஸமம்' த்ராணம்' நாஸ்தி மாத்ரு'ஸமா ப்ரியா"*

தாயை விட பெரிய நிழல் ஏதுமில்லை. தாயை விட சிறந்த அடைக்கலம் வேறு எவரும் இலர். தாயைப் போல நம்மைக் காப்பவர் வேறு எவருமிலர். தாயை விட இனிய வஸ்து வேறு எதுவும் இல்லை.

*ஸமர்த2ம்' வா(அ)ஸமர்த2ம்' வா க்ரு'ஸ2ம்' வாப்யக்ரு'ஸ2ம்' ததா2'*
*ரக்ஷத்யேவ ஸுதம்' மாதா நான்ய: போஷ்டா விதா4னத:"*

தாயின் அன்பு தூய்மையானது. பிள்ளையிடம் குறை காணாதது. சமர்த்தோ, அசமர்த்தனோ ஒல்லியோ குண்டோ எப்படி இருந்தாலும் தாய் தன் பிள்ளையை ரட்சிக்கிறாள். அவளுக்கு ஈடாக வேறு எவராலும் இதை செய்ய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுசாசன பர்வம்

*த$^{3}$ஸா$^{2}$சார்யானுபாத்$^{4}$யாய உபாத்$^{4}$யாயன் பிதா த$^{3}$ஸ$^{2}$'*
*த$^{3}$ஸ$^{2}$ சைவ பித்ரு'ன் மாதா ஸர்வாம்' வா ப்ரு'த்$^{2}$வீமபி'*
*கௌ$^{3}$ரவேணாபி$^{4}$ப$^{4}$க்தி நாஸ்தி மாத்ரு'ஸமோ கு$^{3}$ரு:"*

ஒரு நல்ல ஆசான் (வழிகாட்டி) பத்து (கல்வி போதிக்கும்) ஆசிரியர்களுக்கு சமம். ஒருவருடைய தந்தை நூறு ஆசான்களுக்கு சமம். ஆனால் தாயின் அன்பு தந்தையின் அன்பை விட பத்து மடங்கு அதிகம். நம்மைத் தாங்கும் நிலத்தை விட தாய் பெரியவள். தாயை விட பெரியவர் எவரும் இலர்.

தாயை போற்றிப் பாதுகாக்காமல் விட்டுவிடுகிற பிள்ளைகளை நமது கலாசாரம் ஏற்றுக் கொள்வதில்லை. மிகவும் பாவமான காரியம் தாயை அவமதிப்பது என்று கூறுகின்றன நமது சாத்திரங்கள்.

*ஸ ஜீவதி வ்ரு'தா$^{2}$ ப்$^{3}$ரஹ்மன் யஸ்ய மாதா ஸு$^{3}$:கி$^{2}$தா '*
*யோ ரக்ஷேத் ஸததம்' ப$^{4}$க்த்யா மாதரம்' மாத்ரு'வத்ஸல: '*
*தஸ்யேஹானுஷ்டி$^{2}$தம்' ஸர்வம்' ப$^{2}$லம்' சாமுத்ர சேஹ ஹி '*
*மாதுஸ்$^{2}$ச வசனம்' ப்$^{3}$ரஹ்மன் பாலிதம்' யைர்னரோத்தமை: '*
*தே மான்யாஸ்தே நமஸ்கார்யா இஹ லோகே பரத்ர ச '*

ஹே பிரம்மா! மகன் இருந்தும் எந்த தாய் துக்கத்தில் மூழ்கி இருக்கிறாளோ, அவள் பெற்ற மகன் வாழும் வாழ்வு வீண். எந்த பிள்ளை தாயிடம் பாசத்துடனும், பக்தியுடனும் இருந்து அவளை போஷிக்கிறானோ, அவனுடைய கர்மவினைகள் அனைத்தும் நீங்கி, மறுவாழ்விலும் நன்மை பெறுகிறான். எவர் தாயின் சொல்படி நடந்து காட்டுகின்றனரோ அவர்கள் போற்றத் தக்கவர்.

*ஆஸ்தன்யபானாஜ்ஜனனீ பஸூ$^{2}$னாம்' ஆதா$^{3}$ரலாபா$^{4}$ச்ச நராத$^{4}$மானாம்' '*
*ஆகே$^{3}$ஹகர்மாவதி$^{4}$ மத்$^{4}$யமானாம்' ஆஜீவிதாத்தீர்த$^{2}$மிவோத்தமானாம்' '*

பாலருந்தும் காலம் வரை தான் மிருகங்கள் தாயை தேடுகின்றன, திருமணம் ஆகும் வரையில் தாயை மதிப்பவன் அதமன், வீட்டு வேலை செய்து பராமரித்து வருவது வரை தாயை வேண்டுபவன் மத்திமன், உத்தமர்களுக்கோ ஆயுள் முழுவதும் குடிநீரைப் போன்று அவசியமானவள் தாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் கண்ட தாய்

எல்லாம் துறந்தவர் பட்டினத்தார், அவரால் தாய் அன்பை மறக்க முடியவில்லை. அவர் தாய் மீது பாடியுள்ள பாடல்கள்.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்-செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து முந்நூறுநாள் சுமந்தே
அந்தி பகலாய்ச்சிவனை ஆதரித்துத் –தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து –முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே –அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன்!

அரிசியோ நான் இடுவேன்? ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் –உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்?-மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையில்
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!

வீற்றிருந்தாள் அன்னை,வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள்-பால்தெளிக்க
எல்லாரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகத்துத் தாய்

சித்திரை 19ம் நாள், அன்னை பூபதி நினைவு நாள். 1988 ம் ஆண்டு மார்ச் மாதம் மட்டக்களப்பு புறநகர் பகுதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மாமாங்கப் பிள்ளையார் ஆலயமுன்றலில் அமைக்கப்பட்ட மேடையில் அன்னையர் முன்னணியினர் இந்திய அரசுக்கு தெளிவுபடுத்தும் விதத்தில் அகிம்சைப் போர் ஒன்றை ஆரம்பித்தனர்.

அகிம்சைப் போராட்டத்தை உலகிற்கே அறிமுகப்படுத்திய காந்தி பிறந்த தேசத்தின் படைகள் எமது மண்ணில் நிலைகொண்டிருந்தவேளை மட்டக்களப்பு அன்னையர்கள் ஒன்றுதிரண்டு அகிம்சைப் போரை முன்னெடுத்தது முக்கியமான ஒன்றாகும்.

அகிம்சைப் போர் மேடையில், ஆரம்பத்தில் சுழற்சி முறையில் அன்னையர்கள் தொடர் உண்ணாவிரதத்தை மேற் கொண்டனர் பின்பு அன்னையர் முன்னணியினர் எடுத்துக்கொண்ட முடிவின்படி குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட அன்னம்மா டேவிட் அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற் கொண்டார், ஆனால் இந்தியப் படையினர் தமது வஞ்சகச் செயலால் அன்னையின் குடும்ப உறுப்பினர்களைப் பயன்படுத்தி அன்னம்மா டேவிட் அவர்களை போராட்டத்திலிருந்து வெளியேறச் செய்தனர். இந் நிலையில் உறுதியோடு வீரத்தாய் அன்னை பூபதி அவர்கள் களமிறங்கினார். சாகும்வரை உண்ணாவிரதத்தை தொடந்தார். போரை நிறுத்தி, எமது தேசிய விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம்தான் தமிழ் மக்கள் உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழமுடியும் என்ற வேண்டுகோளை முன்னிறுத்தி, தமிழீழத்தின் அன்னையர் சார்பாக மட்டக்களப்பில் துணிந்து,பணியாது போர்தொடுத்து தற்கொடைச் சாவைத் தழுவிய அன்னை பூபதி அவர்களை எமது மண் என்றும் மறக்காது. அன்னை பூபதி அவர்களின் உணர்வான உறுதியை எவராலும் அன்று அசைக்க முடியவில்லை.அன்னை பூபதி அவர்களின் அமைதி வழிப்போர் தமிழீழ மக்களை மாத்திரமல்ல உலகில் வாழும் அனைத்து தமிழ் மக்களின் குரலாகவும் வெளிப்பட்டது.

பூபதி அம்மாவின் தற்கொடை தமிழர்களின் விடுதலைப் போருக்கு பலம் சேர்த்தது. உறுதியோடு இலட்சியத்தையடையும் உயர்ந்த குறிக்கோளோடு களத்தில் நின்ற போராளிகள் பதவிக்காக, சுயநலத்துக்காக, வசதியான வாழ்வுக்காக போராளிகள் ஏங்கியதில்லை ,தேசியத் தலைவரும் ஏங்கியதில்லை என்பதனை இந்தியப் படையினருடனான போரின்போது வெளிப்படுத்தினார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் எழுந்தவள் அன்னை பூபதி.
தமிழர் வரலாற்றில் இணைந்தவர் அன்னை பூபதி.
மறைந்தும், மறையாத மக்கள் மனங்களில் வாழ்பவர் அன்னை பூபதி
தாயகத்தின் தாய் அன்னை பூபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொஞ்சம் சிரிங்க பாஸ்

### வேலைக்கு செல்லும் அம்மாக்களின் அவசர தாலாட்டு

சோலைக்குப் பிறந்தவளே
சுத்தமுள்ள தாமரையே
வேலைக்குப் போகின்றேன்
வெண்ணிலவே கண்ணுறங்கு
வருசமஞ்சு நீ வன்னிக்கு போவென்று
ஆளுநரும் சொல்லிவிட்டார்
அப்பீல் எழுதி நானும் கைவலிதான் கண்ட மிச்சம்
முன்னித்தவமிருந்து பெற்ற பொன்னே உன்னைவிட்டு
செம்மண் பரப்பெங்கும் புழுதியழைந்து
திரும்பி அம்மா வரும் வரைக்கும்
இறுவட்டில் தாலாட்டு கேட்டபடி நீ உறங்கு.
அஞ்சு மணிக்கே அக்கராயன் பஸ்சேறி
அரக்கப்பரக்க அங்கோடி மாலைஆறு சென்றபின்னே
அங்கிருந்து வரும்வரைக்கும்
அம்புஜமே கண்ணுறங்கு
அஞ்சுமணிக்கு மேல் அம்மாவும் சொந்தமில்லை
ஒன்பது மணிக்கு உன் அப்பாவும் சொந்தமில்லை

தந்தை வந்து கொஞ்சுவதாய்
தாய் மடியில் தூங்குவதாய்
கண்ணான கண்மணியே
கனவு கண்டு நீ உறங்கு.
புட்டிப் பால் குறையவில்லை
பொம்மைக்கும் பஞ்சமில்லை
தாய்ப்பாலும் தாயுமன்றி
தங்கம் உனக்கென்ன குறை
தாய் என்று காட்டுதற்கும்
தழுவி எடுப்பதற்கும்
ஞாயிற்றுகிழமை வரும்வரைக்கும்
நல்லவளே கண்ணுறங்கு!
ஞாயிறு வரும்வரை தாலாட்டை
நான் ஒத்தி வைப்பேன்.
அதுவரை
என் அன்பைப் பொத்தி வைப்பேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இரண்டொரு சூரியன் இருந்தால்தான் கட்டுப்படியாகும் என்று பட்டது அவனுக்கு. எலும்பைக் குடையும் நுவரெலியா குளிருக்கு. இந்த ஒரு சூரியன் போதாதுதான்.

நிற்க முடியவில்லை; வெடவெடக்கிறது. நடக்க முடியவில்லை; நடுங்குகிறது. உட்கார முடியவில்லை; ஊசியாய் குத்துகிறது!...... இப்படியும் ஒரு குளிரா! இப்படியும் ஒரு ஊரா!

காற்றின் குளிர், மயிர்கால்கள் ஊடாகத் தோலுக்குள் நுழைத்து, தசைகளுக்குள் வியாபித்து, ஒவ்வொன்று ஒவ்வொன்றாய் எலும்புகளைத் தேடித் தேடி எண்ணிச் சுற்றிச் சுற்றி..... உடல் ஜில்லிட்டு விரைத்துப் போகிறது.

இதே மாதத்தில் மூன்றாவது தடவை இது.
அம்மாவைப் பார்க்கப் போக வேண்டும் என்னும் பேச்செழுந்தபோதே லயத்துக்கு வரமாட்டோம் என்று மக்கர் பண்ணினார்கள் மனைவியும் மகளும். அவனுக்கும் நியாயமாகவேதான் பட்டது.

நுவரெலியாவிலிருந்து 18 - 20 மைல் தொலைவிலுள்ள அந்தத் தேயிலைத் தோட்டத்துக்கு வாடகைக்கு ஒரு கார் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். பஸ்ஸிலும் போகலாம் தான். ஆனால் நுவரெலியா பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏறுவதென்பது ஒரு சர்க்கஸ் விளையாட்டு மாதிரி. ஸ்டாண்டை நோக்கி ஓடிவரும்போதெ பஸ்ஸில் ஏறும் சாகஸம் தெரிந்திருக்க வேண்டும். அடித்துப் பிடித்து முட்டி மோதிக் கொண்டு ஏறத் தைர்யம் வேண்டும். விழாமல், கால் செருப்பை அறுத்துக் கொள்ளாமல் பாய்ந்து தொற்றிக் கொள்ளும் லாவகம் தெரிய வேண்டும். குடையைக் கண்டதும் மிரளும் பசுமாடுபோல் கூட்டத்தைக் கண்டாலே மிரளும் இதுகளுடன் எவன் பஸ் ஏறுவான்?

ஆகவே அம்மாவைப் பார்க்கத்தானே என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு வாடகைக் கார்தான். இங்கிருந்து ஐம்பது ரூபாயில் முடியும் பயணம் இன்னொரு சைபரைச் சேர்த்துக் கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா டவுனில் அவன் நண்பர் தாயுமானவர் லோயராக இருக்கிறார். அவருடைய வீட்டில் மனைவியையும் மகளையும் நிறுத்திவிட்டு தான் மட்டும் தோட்டத்துக்குச் சென்று வருவதாக ஏற்பாடு.
இந்தமுறை அம்மா ஏமாற்ற மாட்டார்கள் என்றே எண்ணிக் கொண்டான்.
“அங்கே இருந்து நீங்கள் மட்டும் தனியாக அம்மாவைப் பார்க்க போவதென்றால் இங்கிருந்தே தனியாகப் போய் வாருங்களேன்.! நாங்கள் வீட்டில் இருக்கிறோம் என்றாள் மனைவி அவன்தான் சம்மதிக்கவில்லை. ஒருவேளை அம்மா செத்துப்போய்விட்டால் மறுபடி கொழும்பு வந்தல்லவா கூட்டிப் போகவேண்டும் என்று மனைவியைச் சமாதானம் செய்தான். அவள்தான் பிடிவாதமாகத் தோட்டத்துக்கே வருவதென்றாள் – இவ்வளவு தூரம் வந்துவிட்டு இங்கே என்ன தங்குவது என்று.
கார் பிடித்துக் கொண்டெ போனாலும் மேலே கோவிலடியில் நிறுத்திவிட வேண்டும். கோவிலை ஒட்டிக் காடாய் மண்டிக் கிடக்கும் மல்லிகைப் புதர். கரும்பச்சை வானத்தில் நட்சத்திரங்களை வாரி இறைத்தாற்போல் புதர் நிறைய வெள்ளை வெள்ளையாய் வெடித்துச் சிரிக்கும் மலர்கள். கண் மட்டுமல்ல மனமும் கொள்ளாக் காட்சிதான்; இல்லை என்று கூறவில்லை!.... மல்லிகைப் புதரை ஒட்டினாற்போல் கொழுந்து நிறுக்கும் மடுவம். மடுவத்தின் ஓரமாக வந்து நின்று கிணற்றுக்குள் எட்டிப் பார்ப்பதுபோல் கீழே பார்த்தால் மலையடிவாரத்தின் பள்ளத்துக்குள் தெரியும் ஏழெட்டுப் பத்து லயத்துக்கூரைகள் சிவப்புச் சிவப்பாய் கோடாகப் புகை விட்டுக் கொண்டு.
அதில் ஒன்றின் ஓரத்துக் காம்பிராதான் அம்மாவின் வாசஸ்தலம். அம்மாவும் தம்பியின் குடும்பமும் அதற்குள்தான்.

வெள்ளைக்காரன் தேயிலை பயிரிடத் தோடங்கிய காலத்தில் கட்டப்பட்டவை இந்த லயங்கள். நூற்றைம்பது – அறுபது ஆண்டு பழைமை வாய்தவை. மாற்றமே இல்லாமல் அப்படியே தொடர்கின்றன. அரசுக்கு அரசு தலைவர்கள் மாறுகிறார்கள் ஆனாலும் இவை மாறுவதில்லை!
கொழுந்து மடுவத்துக்கு இந்தப் பக்கமாக இரண்டு தேயிலைச் செடிகளின் இடைவெளிக்குள் ஒரு குறுக்குபாதை இறங்குகிறது.
படிகள் கட்டப்பட்டுக் கல் பெயர்ந்து, பல் விழுந்த எகிறுபோல்..... அதன் வழியாகக் கீழே இறங்க வேண்டும். நின்று நெளிந்து ஒடிந்து திரும்பி இருநூற்றறுபது படிகள் இறங்கிவிட்டால் அம்மா இருக்கும் லயம் வந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எப்படி அவ்வளவு கரெக்டாக இறுநூற்றறுபது படி என்று கேட்கத் தோன்றுகிறதா? பள்ளி நாட்களில் தினசரி இரண்டு தடவை ஏறி இறங்கிய படிக்கட்டாயிற்றே! இறங்கி ஓடும்போது முதல் நாலைந்து படிகளை விட்டு விட்டு எண்ணத் தொடங்கினாலோ அல்லது கடைசி நாலைந்து படிகள் வரும் போது எண்ணுவதை எதேட்சையாக விட்டுவிட்டாலோ, கல்லுக்கு கல் கால் வைத்து ஓடும்போது எண்ணி எண்ணி ஓடிய படிகள்தான். பழக்கம்தான். இருநூற்றறுபதுக்குக் கூடுமே தவிர குறையாது.

கோவிலடியில் கார் நிற்கும்போதே கீழே லயத்தில் பக்கத்துக் காம்பிராக் காமாட்சி, "பெரியத்தம்பி வாறாப்பல இருக்கேம்மா?....." என்று விசாரிக்கத் தொடங்கியிருக்கும்.
வாசல்வரை வந்து பூவரச மரத்தடியில் அம்மா நிற்பார்கள். தம்பியின் பிள்ளைகள் பின்னால் நிற்கும். தம்பி பட்டியில் இருப்பான். ஏதாவது மண்ணை நோண்டிக் கொண்டு.
"பாத்து, பாத்துப்பா!.... பாத மாதிரியா இருக்கு?.... அட மழையில மண்மணல்லாம் அரிச்சுக்கிட்டுப் போயிறுச்சி!....... பொந்துக்குள்ளாற ஏதுங் கால விட்டுக்குறாம!....." என்று குரல் கொடுத்தபடி இரு கைகளையும் நீட்டிக் கொண்டு அவர்களை வரவேற்கும் அம்மா.....
வயதால் பாதியும் குளிரால் மீதியுமாகச் சுருங்கித் தொங்கும் தோல்களுடன் அந்த முகம், அந்தக் கைகள்!......
அள்ளி அணைத்துக் கொள்ளும் அந்தக் கைகளின் சிலிர்ப்பு இவனுடலுடன் இழைய, அப்படியே அலாக்காக அம்மாவைத் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி உள்ளே நுழைந்து விடுவான்.
பின்னால் நிற்கும் சின்னதுகள் பேந்த பேந்த முழிக்கும்.

"விடுப்பா விடு!... நான் புள்ளையக் கொஞ்சணும்!" என்று தன்னை விடுவிடுத்துக்கொண்டு வெளியே திரும்புகையில் மருமகளும் கொழும்புப் பேத்தியும் லயத்துக்குள் நுழைவார்கள்.
மருமகளின் நெற்றியில் கையை வைத்துக் கன்னம் வழிதாவாய் வரை உருவி நெற்றிப் பொட்டில் விரல்களை நெரித்துப் படபடவென்று முறித்துக்கொண்டு, "பாத்தியா எவ்வளவு திருஸ்டி என் செல்லத்துக்கு!" என்றபடி துணிகளை இழுத்துக் கொடியில் பொட்டுவிட்டு நாற்காலியை இழுத்துப் போட்டு "இரும்மா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பார்கள். கொழும்புப் பேத்தியின் ஆப்பிள் கன்னங்களைத் தனது கைக்குள் அடக்கி அப்படியே இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொள்வார்கள்....

அவனும் மகளும் கட்டிலில் அமர்ந்து கொள்வார்கள். அம்மா இருவருக்கும் நடுவில் படத்துக்கு அமர்வதுபோல் அமர்ந்து கொள்வார்கள்.

தம்பியின் மனைவி ஆவி பறக்கப் பறக்கத் தேனீர் கிளாஸ்களுடன் வந்து நிற்பாள்.

"தேத்தண்ணி குடிப்பியாம்மா?" என்று தேனீர்' கிளாஸை எடுத்து நீட்டுவார் அம்மா பேத்தியிடம்.

"ம்!" என்றபடி கிளாஸை வாங்கிக் கொள்வாள் பேத்தி.

'காலையில் தேத்தண்ணி குடிக்க மாட்டோம். கோப்பிதான்' என்பது போன்ற பாட்டிக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் பேச்சுக்கள் கூடாது என்று சின்னவளுக்குச் சொல்லிக் கொடுத்து வைத்திருக்கிறான். எது எது என்பதெல்லாம் அந்தச் சிறிசுக்கு எப்படித் தெரியும்? ஆகவே எல்லாவற்றிற்கும் 'ம்' தான்!

"அம்மா, டீ!" என்றவாறு அம்மாவிடம் மகள் எழுந்து செல்வதன் அர்த்தம், 'எனக்கு டீ வேணாம்! என்பதுதான்! "ட்றிங் லிட்டில்; வெரி கோல்ட், நோ?" என்றபடி கிளாஸை வாங்கி மகளுக்குப் பருக்கத் தொடங்குவாள் தாய்.

"நீ குடிம்மா; நான் குடுக்கிறேன் பாப்பாவுக்கு!" என்றவாறு அம்மா கட்டிலை விட்டிறங்குவார்கள்.

"எல்லாம் ஆயும் மகளும் பாத்துக்கிறுங்க; நீங்க இருங்க!" என்று, தான் பாதி குடித்த கிளாஸை அம்மாவின் வாயில் வைத்து மெதுமெதுவாகச் சாய்ப்பான் அவன்.

"நீ குடிப்பா!" என்றாலும் அம்மாவின் தொண்டைக்குள் அது ஜீவாம்ருதமாய் இறங்கும். கண்கள் படபடத்துக் கசியும் புருவத்துக்கும் தெரியாமல்.

வேரும் மண்ணுமாய் நாலைந்து நோக்கல் கிழங்குடன் வந்து நிற்பான் தம்பி. தோட்டத்தில் அவனுக்கு சுப்பர்வைஸர் வேலை கொடுத்திருக்கின்றார் துரை! ஒரு வருஸம்போல் ஆகிறது அரைக்கால் சட்டை, சப்பாத்து, மேஸ் போட்டு, அதுவரை கையில் கத்தியும் தோளில் மண்வெட்டியும்தான். அவன் மனைவி தோட்டத்தில் வேலை. பழைய மலையோ மட்டக் கொழுந்தோ கொழுந்துதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைவிரல் நுனியும் ஆள்காட்டி விரலோரங்களும் வரியாய்த் தேயிலைக் காட்டையுடன் கறுப்புப் கறுப்பாய்க் கோடு பாய்ந்து கிடப்பதெல்லாம் கொழுந்தாய்வின் முத்திரைகள். பெரியண்ணன் சம்சாரம் வந்தால் அந்தப் பளிங்கு விரல்கள் தான் இவளை முதலில் கவர்வது. அக்காவின் மோதிரம்கூட அந்த விரலால்தான் பெருமை அடைவதாக எண்ணிக்கொள்வாள்!

நோக்கல் கிழங்கை வேருடன் பார்த்தே இராத மகளுக்கு ஒரே வியப்பு! கண் விரிய நிற்பாள்!

"வேர வெட்டி வீசுங்க! இல்லாட்டி மண்ண அலசிக்கிட்டு வாங்க!" என்று மனைவியும் "கோழியத் தொறந்து உட்றாதப்பா! கோணக்கொண்ட சேவல சுத்தம் பண்ணிக் குடுத்துறு! என்று அம்மாவும் அவனுக்கு உத்தவிடுவார்கள்.

இருவருக்குமே தலையை ஆட்டிவிட்டு அண்ணனைப் பார்ப்பான் தம்பி.

"ராத் தங்கிட்டு நாளைக்குப் போங்களேன்? ஆள் நெருங்கி என்னா ஆயிறப் போவுது?..... மனசிருந்தா எடமா இருக்காது!..... கார்க்காரன நாளைக்கு வான்னு அனுப்பிட்டு வரவா?....."

அண்ணன் குடும்பத்தை ஒரு இரவு தங்களுடன் தங்கவைத்துக் கொள்ளும் ஆசை அவன் முகத்தில் நர்த்தனம் ஆடும்.

அம்மாவுடன் தங்கி இரவைக் கழிக்க அவனுக்கும் ஆசைதான். ஆனாலும் இருக்கும் அந்த ஒரே காம்பிராவில் படுக்க, எழுந்திருக்க, காலையில் வெளியே தெருவே போக எங்கே வசதி இருக்கிறது?

லயத்தின் முன் லைசன் கல்லில் நின்றுதான் பல் துலக்கி முகம் கழுவ வேண்டும். முழு லயமுமே நின்று வேடிக்கை பார்க்கும். இல்லாவிட்டால் பட்டிப் பக்கம் போய்விட வேண்டும்.....

முழு லயத்துக்குமே இருப்பது இரண்டே மலசல கூடங்கள் அதுவும் தேயிலைக்குள்ளே போக வேண்டும் கையில் செம்புடனோ கைவாளியுடனோ!

கொழும்பிலேயே பழகிவிட்ட மனைவி மக்களுடன் இதெல்லாம் பெரும் சிரமம். ஆகவேதான் மனதைக் கடித்துக்கொண்டு வந்த அன்றே கிளம்பிவிடுவான்!

தனியாக வந்தால் தங்கிவிட்டே செல்வான். அவன் புரண்டெழுந்த மண் அது!

ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் தம்பியைப் பார்த்து ஒருவகை ஏமாற்றத்துடன் கூறுவான், "இல்ல ராசு கார்க்காரன நாலு மணிபோல வான்னு சொல்லி அனுப்பீட்டுத்தான் வந்தேன்...." என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மி அரைக்கிற சத்தங்கேக்குது என்னா அரைபடுது?" என்பான். "நீ சும்மா இரேன் கொச்சிக்கா அரைக்கிறா உன் கொழுந்தியா" என்று கூறியபடி அம்மா தேனீர் கிளாஸ்களை எடுத்துக்கொண்டு அடுப்படியை நோக்கி நடப்பார்கள்.
அந்த வயதிலும் அந்தக் குளிரிலும் அம்மா சிட்டைப்போல் பறப்பதாகத் தெரியும் அவனுக்கு. உழைத்து உரமேறிய உடல் சீக்கிற்கோ தளர்வுக்கோ அது இடமளிக்காது. அவனுடைய வருகையும் அவளுக்கு ஒரு புதுத் தென்பைக் கொடுக்கிறது. உடலிலே ஒரு இளமை; நடையிலே ஒரு துள்ளல்!
தம்பி மனைவியைக் கொழுந்தியாள் என்றழைக்கும் உறவு முறையின் உரிமை, குழம்பாக்கக் கொச்சிக்காய் அரைபடும் அம்மிச் சத்தம் – இத்தியாதிகளைக் கேட்க இங்கு வரவேண்டும்!
கொழும்பில் யார் அம்மியில் அரைக்கிறார்கள்? பொலித்தீன் பொட்டலங்கள் தானே!
" என்னாப்பா, அப்படியே உக்காந்துட்டா எப்படி?........" என்று மனைவியைக் கிளப்புவான். அவன் மகள் இன்னும் அம்மாவின் மடியிலிருந்து எழவில்லை!

மனைவியையும் மகளையும் கூட்டிக் கொண்டு அவனும் தோட்டத்துக்குள் செல்வான். தம்பியின் சின்னது இரண்டும் அக்காவின் கைகளை பிடித்துக்கொண்டு உடன் நடக்கும்.
அம்மாவின் மடியில் அவனும் அவன் மடியில் அம்மாவுமாய் ஆனந்தமாக அந்தக் கொஞ்ச நேரப் பொழுதைப் போக்கி விடுவான் அவன்.
ஆனால் மனைவியும் மகளும் எத்தனை நேரம் அதற்குள்ளேயே அமர்ந்திருப்பார்கள்?
லயத்துக்கும் காய்கறி தோட்டத்துக்கும் நடுவில் இருக்கும் வேலியிடம் நிற்கிறது ஒரு மாதுளை மரம். சின்னவனுக்கும் அதற்கும் ஒரு வயசு என்று இறக்கும்முன் அப்பா அடிக்கடி கூறுவதுண்டு. கிளை நுனிகளில் சிவப்புச் சிவப்பாய் சின்னச் சின்னப் பூக்களும் குண்டு குண்டாய்க் காய்களுமாய்.....
ஒரு காயைத் தொட்டுப் பார்க்கின்றாள் மகள். தனது மொட்டுக்கள் விரிய "மாதுளை" என்பாள் தகப்பனைப் பார்த்து.
"புடுங்கி திண்ணும்மா; குடற் பூச்சிக்கும் நெஞ்சுச் சளிக்கும் நல்லது" என்று உள்ளிருந்து ஓடி வருகிறது அம்மாவின் குரல்.
தங்களைச் சுற்றி சுற்றியே வலம் வரும் அம்மாவின் அன்புப் பார்வை அவனைத் தடுமாறச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கென்று அவன் என்ன செய்திருக்கின்றான்? படித்து பாஸாகி உத்தியோகம் தேடி காதலித்துக் கல்யாணம் கட்டிக் குழந்தை பெற்று .....
என் மகன் இப்படி இப்படி இருக்கிறான் என்று கூறிக் கூறிப் பெருமை படும் நெஞ்சம் அது!
எனக்கு என்ன செய்தாய் என்று எதிர்ப்பார்க்கும் நெஞ்சமல்ல...
இப்படி ஒருநாள் வருவதுவும் "இனி எப்பப்பா?....." என்னும் கேள்வியுடன் விடை பெறுவதுவும்தான் அவன் செய்வது!
இந்த வருகைதான் அந்தத் தாயுள்ளத்தை எப்படி ஆட்கொண்டுவிடுகிறது!
அம்மாவுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்னும் உறுத்தலில் ஒரு தடவை கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போனான் தன்னுடன் வைத்துக்கொள்ள!
இந்தக் குளிருக்கும் கொழும்பின் சூட்டிற்கும் அம்மா திண்டாடிப் போனார்கள். பட்டியில்லை, மாடில்லை, சுற்றிவரத் தோட்டமில்லை, பிடுங்கித் சமைக்கக் காய்கறியில்லை! அம்மாவுக்கு ஒரு நாள் போவது ஒரு மாதம் போல் தெரிகிறது.
மகன் வீட்டில் மாட்டிறைச்சி ஆக்குகின்றார்கள்! கொழும்பில் இதெல்லாம் சகஜம்: சாதாரணம். ஆனால் அம்மாவுக்கு...
" .....எனக்கு...... தனியா......" என்றார்கள் மகனிடம் ஒரு நாள்.
" உங்களுக்கு அதெல்லாம் இல்லே தனியாத்தான்" என்று தொடங்கிய மகனிடம் மெதுவாகக் கூறினார்கள்:- "தனியா ஒரு கோப்பயும் ஆப்பயும்பா!...... நீங்க பாவிக்ற ஆப்ப, கரண்டி எல்லாம்...... வாணாம்"
மருமகளிடம் அம்மா மூச்சு விடமாட்டார்கள். ' வாம்மா, இரும்மா' என்றுகூடச் சொல்லமாட்டார்கள்: 'வாங்க, இருங்க' தான். மருமகள் அம்மாவுக்கு ஒரு மகாராணி மாதிரி! என் மகனை நம்பி வந்தவளாயிற்றே என்னும் நினைவு.
பல்லைக் கடித்துக்கொண்டு ஒரு பத்து நாள் இருப்பார்கள் அவ்வளவுதான்!
தான் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டும் என்பதைத் தவிரப் பிள்ளைகள் தனக்குச் செய்யவேண்டும் என்னும் எதிர்பார்ப்பு இல்லாதவள் தாய்.
நம்மைச் சுற்றி ஆயிரம்பேர் இருக்கலாம். அன்பைச் சொரியலாம். ஆனால் யாருமே அம்மாவாக ஆகிவிட முடியாது!
அம்மா அம்மாதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுளை மரத்தைத் தாண்டிப் பட்டியில் மாடுகளிடம் நின்று பயந்து பயந்து தொடும் மனைவி, மகளைக் கேலியாகப் பார்த்துப பசுவின் மடியில் கை வைத்துக் காம்பை இழுத்துப் பாலைப் பீய்ச்சிக்காட்டிப் பெருமைப்பட்டுக்கொண்டு கீழே நடப்பான், அவன். மடியில் கை பட்டதும் பசு சிலிர்த்துக் கொள்வதை வேடிக்கை பார்த்து நிற்கும் மகள், உடலைக் கூனி வாலை உயர்த்தி அது தடதடவென்று பெய்ய ஆரம்பித்ததும் தெறிகக் ஆரம்பித்ததும் காலைத் துடைத்தபடி ஓடி வந்துவிடுவாள்!

பட்டிக்குக் கீழே ஒரு நீரோடை. தண்ணீர்க் கான் அருகே தம்பி ராசு கோழி வெட்டிக்கொண்டிருப்பான். அவன் தலைக்கு மேலாகப் பலாமரத்தில் முற்றாத காய்களின்மேல் தாவித்தாவிப் பாய்ந்து, பழுத்திருக்கிறதா என்று வாசனை பிடிக்கிறது அணிற் கூட்டம்.
"அணில் பழம் தேடுது, பாத்தியா" என்று மகளுக்குக் காட்டுவான்.

தம்பி கோழி வெட்டும் லாவகத்தை ரசிப்பாள்மனைவி.
ஏதோ வாசம் மூக்கைத் துளைக்கிறது. நுனி மூக்கு விரிந்து வாசனைக் காற்றை மாற்றிக்கொள்கிறது.

" அன்னாசி ஒண்ணு பழுத்திரிச்சி. கொஞ்சம் இலை சருகெல்லாம் போட்டு மூடித்தான் வச்சேன்! காக்கா கொத்தியிருக்கும்: அதுதான் கமகமக்குது!........" என்று கோழியை அப்படியே வைத்துவிட்டுத் தம்பி எழுந்து போய் அன்னாசிப் பழத்தை ஒடித்து எடுத்து வந்து நீட்டுவான்.
மகள் வாங்கிக்கொள்வாள். கொண்டைக்குக் கீழே லேசாகக் கொத்தியிருக்கிறது காகம். வாசனை தாங்கமுடியவில்லை.
"வெட்டித் தர்றேன் பெறகு" என்றபடி கோழி வெட்டுவதில் குந்திக்கொள்வான் தம்பி.
நீரோடையின் இருமருங்கிலும் கரும்பு செழித்து நிற்கிறது. கரும்போலையின் அடிப்பக்கம் கறுப்புக் கறுப்பாய் ஆடியாடி அமர்ந்திருக்கும் அழகான சின்னச் சின்ன பூச்சிகள் இலை.
ஆடியதும் பறந்து மறுபடியும் அதேபோல் கூட்டமாக அமரும் காட்சி கண் கொள்ளாதது.
மனைவிக்கும் மகளுக்கும் கரும்பை ஆட்டி ஆட்டிக் காட்டிக்கொண்டிருப்பான் அவன். பூச்சிகள் எழுந்து பறப்பதையும் மீண்டும் அமர்வதையும் கண்டு ரசிக்க.
இப்படி ஒவ்வொன்றையும் வியப்புறும் வண்ணம் காட்டி அவர்களின் ஆயாசத்தை, தனிமையை, இட வித்தியாசத்தை விரட்டிப் பொழுதைக் கழித்துவிடும் எண்ணம் அவனுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அண்ணிக்கும் மகளுக்கும் வேடிக்க காட்டுறியா, கோழி வேல நடக்குதா? அரக்கப் பறக்க அள்ளிப்போட்டுக்கிட்டு அனுப்பத்தான் வேண்டி வரும்! சுருக்காக் கொண்டாந்து குடு” என்று இளைய மகனை எச்சரித்த அம்மாவின் குரல், “கரும்போலயத் தடவிப் பார்க்க வேணாம்ணு அம்மாகிட்ட சொல்லும்மா வெட்டுறது தெரியாம வெட்டிப்புடும் வெரல....” என்று பேத்திக்கும் எச்சரிக்கை விடுக்கிறது.

கரும்பிடமிருந்து விலகி நின்றுகொள்வாள் மருமகள்!

“அதே பஞ்சு மாதிரி வெரல்! அறுத்தாலும் ஆழமாத்தான் அறுத்துப்புடும்” என்று ஒத்தூதும் தம்பி மனைவியின் குரல்.

அம்மா நீரோடை அருகே வந்துவிடுவார்கள். “பாத்தது போதும், இனிப் பெறகு பாக்கலாம், வாங்க தேத்தண்ணி குடிக்க!.....”

“இப்பத்தானே குடிச்சோம்?”

“அது வெறுந் தேத்தண்ணிதானே, காலையாகாரம் ஏதுஞ் சாப்புடுறதில்லியா! சுடச்சுட உப்புமா கௌறியிருக்கேன்.... ஆறிப்போயிறும், வாங்க” என்று மருமகளையும் பேத்தியையும் அழைப்பாள். பேத்தியிடமிருந்து வாங்கும் அன்னாசிப் பழத்தைக் கீழே வைப்பாள்-

“ பச்சப் புள்ள கையில் இதத் தூக்கிக் குடுத்தா எம்மா நேரம் வச்சிருக்கும்!” என்றபடி.

எட்டி நாலைந்து வாழை இலை நுனிகளை நறுக்கிக்கொள்வார்கள் அம்மா.

அவனால் நம்ப முடியவில்லை! அதற்குள் அம்மா என்னென்ன செய்கிறார்கள்! அந்தக் கைகளுக்குள் என்ன மாயை இருக்கிறது! தாயுடன் அறுசுவைபோம் என்று அன்று சொன்னவன் சும்மாவா சொல்லி வைத்திருப்பான்? இன்னும் காய்கறித் தோட்டம் காட்ட வேண்டும்! கொண்டை நாரான் மரம், பனைபோல உயர்ந்து நிற்கும். கறி வேப்பிலை மரம், சேனையில் நிற்கும் கொய்யா மரங்கள்.....

அத்தனையும் பார்த்து, பறித்து, மென்று, துப்பி முடிய நேரம் சரியாகிவிடும். பிறகு நடந்த களைப்பு நீங்கக் கொஞ்சம் உட்காரப், பகல் சாப்பாட்டு நேரம் வந்துவிடும். பகல் சாப்பாடு விருந்து தான். சாப்பிட்டு முடித்துக் களைப்பாறி அவசர அவசரமாகத் தேனீர் தயாரித்து அதையும் குடித்து ரெடியாகியதும் மலை போல் நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியேறும் படலம்! இருநூற்றறுபது படிகளை ஏறி முடிப்பதென்றால் சாப்பிட்ட விருந்துச் சாப்பாடு, குடித்த தேனீர் அத்தனையும் எங்கேயென்று போய்விடும்!

கார்க்காரன் வந்து ஹோர்ன் அடித்துக்கொண்டு நிற்பான்.

இதுதான் ஆண்டுக்கு இரண்டு தடவை அல்லது மூன்று தடவை என்று நடக்கும் அம்மா தரிசனம்! பழைய கதை.

அப்போதெல்லாம் அவ்வளவாகத் தோன்றுவது கிடையாது. முழுமுதற் காரணமே அம்மா! அம்மாவின் பராமரிப்பு! தங்களைச் சுற்றிச் சுற்றி வந்து நிற்கும் அம்மாவின் அன்புவட்டம்!

இப்போது அம்மா படுக்கையில். ஒரு பழந்துணிபோல் கட்டிலின் ஒரு மூலையில் கிடக்கின்றார்கள்.

கையில் ஆட்ட ஓட்டமில்லை. கால்களில் ஒரு அசைவில்லை. உடலில் ஒன்றுமே இல்லை.

சீக்கிற்கோ தளர்ச்சிக்கோ இடம் கொடாத, உழைத்து உரமேறிய உடல் என்று அவனே பெருமைப்பட்ட உடல்தான் இப்படிக் கசங்கி, நொடிந்து, நைந்துபோய் நார் நாராய்.........கிடக்கிறது.

அவனையும் மருமகளையும் பேத்தியையும் கண்டதும் அந்தக் கண்களிலே ஒரு ஒளி! உதட்டிலே ஒரு சிரிப்பின் நெளிவு! அவ்வளவுதான். 'வந்துட்டியாப்பா!' என்னும் மனத்திருப்தி!

கைகள் போர்வைக்குள் நடுங்குவதுபோல் ஒரு துடிப்பு. கம்பளிக்குள் கையை விட்டு அம்மாவின் கைகளைப் பற்றிப் பிடித்தான். மனைவியினதும் மகளினதும் கைகளையும் உணர்வற்றுச் சோர்ந்து கிடக்கும் அந்தக் கைகளுடன் சேர்த்துப் பின் எடுத்து விட்டான்.

இந்த மாதத்திலேயே இது இரண்டாவது வருகை. இரண்டு தடவையும் தம்பிதான் தந்தி கொடுத்திருந்தான்.

'அம்மாவை நம்ப ஏலாதிருக்கிறது. உடனே வரவும்.' என்று.

அம்மாவைப் பார்த்த டாக்டர்கூட, "ஆஸ்பத்திரி அது இதெல்லாம் வேண்டாம்! மிஞ்சிமிஞ்சிப் போனா ரெண்டு மூணு நாள் தாங்கும்! எதுக்கு ஆஸ்பத்திரியில சாக விடணும்? ஆண்டு அநுபவிச்ச வீட்டுலயே இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டார்!

அம்மாவுக்கும் எழுபது பிந்திவிட்டதுதானே!..........

அம்மா எழுந்து நடமாடாத அந்தச் சின்னக் காம்பிராவை அவனால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை.

அம்மா சுற்றுமுற்றும் பார்த்து விழித்தார்களாம். வாயே திறக்காத அவர்கள் "அண்ணன் வரலையா?....." என்று மெதுவாகக் கேட்டார்களாம். பயந்துபோன தம்பி என்ன செய்வான்? தந்தி அடித்திருக்கின்றான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவன்பாடு தர்மசங்கடமாக இருக்கிறது. எவ்வளவு நேரம் என்று இருக்க முடியும்?
நான் போகட்டா என்று எப்படிக் கேட்க முடியும்?....... மனைவி மாதுளை மரத்தடியில், மகள் பாட்டியின் கால்மாட்டில்......சீக்கிரம் செத்துப் போம்மா என்று அம்மாவின் காதுக்குள் சொல்லவா முடியும்?
சென்ற முறையும் இப்படித்தான்.
ஏழெட்டு நாட்களுக்குள் இரண்டாவது முறையாக வந்திருக்கின்றான் அண்ணன் தம்பியையும் தம்பி அண்ணனையும் பார்ப்பதுவும் திரும்பிக் கொள்வதுவுமாக.......
"இந்த முறை ... அம்மா ..... ஏமாத்த மாட்டார்கள்........" என்று திக்கித் தடுமாறிக் கூறுகின்றான் தம்பி.
அண்ணன் குடும்பத்தை அனாவசியமாக அசௌகர்யத்துக்கு உள்ளாக்கிவிடுகின்றோமோ என்னும் ஒரு குற்ற உணர்வு தம்பிக்கு.
" டாடி, டாடி! பாட்டி எழும்புது!" ஓடி வந்தாள் மகள்.
எல்லாரும் உள்ளே ஓடி வந்து சுற்றி நின்றார்கள்.
அசையாமல் கிடந்த அம்மாவின் கை, எழுந்து நிற்கிறது. வாயைக் குவித்துக் காட்டுகின்றார்கள் அம்மா.
"பாலூத்தச் சொல்லுங்க மூத்த மகந்தானே?" என்கிறது கூட்டத்துக்குள் இருந்து ஒரு கிழக் குரல்.
"........த...தண்ணி..." என்ற சத்தம் வருகிறது அம்மாவின் குழிந்த வாயிலிருந்து!
மூத்தவன் கட்டில் விளிம்பில் அமர்ந்து அம்மாவின் தலையை உயர்த்தித் தண்ணீரைப் பருக்குகின்றான். மடக் மடக் என்று குடித்துவிட்டு அம்மா படுத்துக்கொண்டார்கள்!
குனிந்து படுக்க வைக்கும்போது அவனிடம் மெதுவாக அவனுக்கு மட்டும் கேட்குமாப்போல் கூறினார்கள் :- "என்னயச் சுருக்கா செத்துப்போகச் சொல்றீங்களா?...பாலூத்தக் காத்திருக்கி ங்களா?..... கேட்டுதே ஒரு குரல்...."
கண்களை மூடிக்கொண்டார்கள்.
இமைக் கோடுகளில் ஈரம் கசிகிறது... அம்மா பேசினார்களா... அல்லது அவன் மனம் பேசியதா? அவனுக்கு புரியவில்லை.
"..... நெறய.... செலவாகுமே பயணத்துக்கு?"
"பறவாயில்லை வேற என்னதான் செய்யலாம்.... என்றபடி கிளம்பினார்கள்...
கைக்கும் வாயக்குமான வாழ்க்கை வாழும் நடுத்தர குடும்பம் அவனுடையது. கொழும்பில் இவன் போன்றோரின் வாழ்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமானது... ஆபூர்வங்கள் நிறைந்தது.
திடீரென்று குஷி வந்து விட்டால் இருநூறு ரூபாய்க்கு ஐஸ்கிரிம் வாங்கி தின்பார்கள். நூறு ரூபாய்க்குக் குடைவாங்க சங்கடப்பட்டுக்கொண்டு கழுத்தில் டையுடன் மழைக்கு கையை தலையில் வைத்துக் கொண்டு றோட்டில் ஓடுவார்கள்.. அந்த வர்க்கத்தின் அச்சொட்டான பிரதிநிதிதான் இவனும்... இல்லாவிட்டால் ஐம்பது ரூபாயில் பஸ்ஸில் செல்வதை விடுத்து ஐநூறு ரூபாய் செலவு செய்து காரில் போவானா?
ஆண்டுக்கு இரண்டு தடைவை என்றால் பரவாயில்லை..
இந்த பத்து பதினைந்து நாட்களுக்குள் இரண்டு தடைவ என்றால்....
"அடுத்து என்னா செய்யபோறீங்க?..." என்றாள் மனைவி
கேள்வியின் ரகசியம் அவனுக்கும் புரிகிறது... ஏற்கனவே இருந்த நகைகளை பேங்கில் அடுத்த முறைக்கு என்ன செய்வது...?
அம்மாதானே என்ன செய்திருக்கோம் அவுங்களுக்கு..? இதையாவது செய்வோம்...
அம்மா அவனை கடன் காரனாக்கிவிட்டு போகமாட்டார்கள்.. அம்மாவுக்கு தெரியும்!
தன்னைத்தானே சமாதானமும் செய்து கொள்கிறான்.
அடுத்த நாள் ஆபீசில் சீ.சீ.யிடம் ஒரு கடன் விண்ணப்பம் எழுதி கொடுத்தான். நிலைமையை விளக்கி...
லஞ்ச் டைமில் சீ.ஃப் கிளாக் அவனை கூப்பிட்டு அவன் கொடுத்த கடிதத்தை திருப்பிக் கொடுத்தார்...
அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.. வட்டிக்குத்தான் வாங்கணுமோ?
"இது தேவையில்லை" என்ற சீ.சி.... தொடர்ந்தார். "டெத் ஃபண்ட் ஸ்கீம்" பற்றி உங்களுக்குத் தெரியாதா.. இந்த ஸ்கீம் அறிமுகமாகி ஆறேழு மாதங்கள் தான் ஆகின்றன. நிரந்தர ஊழியர்களுக்கு இந்த ஃபண்ட் கிடைக்கும். அதுவும் ஒரே நாளில் கிடைக்கும்.... ஆனால் இறந்தவர் ஊழியரின் அம்மாவாக அல்லது அப்பாவாக இருக்க வேண்டும்...
டெத் சர்ட்டிபிகேட் வேண்டும்.. உங்கள் சம்பளம் என்ன ?
"ஈ.பி.எ.ஃப் கழிக்காம பதினாறு சேர்"
"மூன்றுமாத சம்பளம் கிடைக்கும் யூவில் கெட்டிட்"
"தாங்க் யூ சேர்" என்று எழுந்தான் அவன்.
அம்மா ஏமாற்றமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறநானூற்றுத் தாய்

போர் என்பது ஆணுக்குரியதாக முழுக்க மாறி விட்ட சூழலில், தாங்கள் வாழும் சமூகத்தினரைக் காத்திடவும், குறுநில மன்னர்களின் நலனுக்காகப் போரில் ஈடுபடுவதற்காக ஆண் குழந்தைகளைப் பெற்றுத் தருவது பெண்களின் கடமையாகப் புறநானூறு சித்திரித்துள்ளது. போர்க்களத்தில் மகன் இறந்தாலும் அதைக் குறித்துப் பெருமிதம் அடைவதுதான் வீரத்தாயின் சிறப்பெனக் கருதப்பட்டது.

"மீன் உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன்" என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே! கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே!

(புறநானூறு:பா.277).

பூங்கண் உத்திரையார் வீரம் குறித்த புனைவைத் தனது பாடலில் கட்டமைத்துள்ளார். கொக்கின் மெல்லிய இறகு போன்ற நரைத்த கூந்தலுடைய வயதான தாயின் இளைய மகன், போரில் எதிர்த்து வந்த யானையைக் கொன்றுவிட்டு, அவனும் இறந்து விட்டான். இச்செய்தியைக் கேட்டவுடன், அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சிக்கும் மேலாகத் தாய் மகிழ்ந்தாள் கண்ணீர் உகுத்தாள். இப்பாடலில், தாய்க்கும் மகனுக்குமான குருதித் தொடர்பினை விட, அரசியல் உறவு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. மகனின் இறப்பு தரும் வலியை விட, வீரமான மரணம் குறித்துத் தாய் மகிழ வேண்டும் என்ற போதனை பாடலின் வழியே வெளிப்பட்டுள்ளது.

'கெடுக சிந்தை கடிது இவள் துணிவே' எனத் தொடங்கும் ஒக்கூர் மாசாத்தியார் பாடல் (புறம்:279) 'தாய்' பற்றிய புதிய பிம்பத்தைக் கட்டமைத்துள்ளது. பெண் என்ற நிலையில் இழப்பின் வேதனையைப் பொருட்படுத்தாமல், சமூதாயத்திற்காக வாழ்கின்றவள் 'மூதின் மகளிராதல்' நிலையை அடைகின்றாள். இதுவரை நடைபெற்ற போர்களில் அவளுடைய தந்தை, கணவன் வீரத்துடன் போரிட்டு மடிந்துவிட்டனர். இன்று போர் முரசு ஒலிப்பதைக் கேட்டவுடன், தனது ஒரே மகனான சிறுவனைப் போருக்கு ஆயத்தமாக்கிக் கையில் வேலைக் கொடுத்து 'செருமுகம் நோக்கிச் செல்க' என ஆணையிடுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் தன்னை எதிர்த்து வந்த யானையைக் கொன்று இறந்தவரின் தாய் அவனைப் பெற்ற காலத்திலும், பெரிதும் மகிழ்ந்தவளாய்க் கண்ணீர் பெருக்கினாள். மகனின் இழப்பைவிட அவனது வீரச்செயல் தந்த பெருமிதம் காரணமாக மகிழ்ச்சி அடைவதுதான் தாய்க்கு மகிழ்ச்சி தரும் என்பது நுண்ணரசியல் சார்ந்தது.

நரம்பு எழுந்து உலறிய நிரம்ப மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினன் என்று பலர்கூற
மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலை அறுத்திடுவென், யான்எனச் சினைஇக்
கொண்ட வாளடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே!

(புறநானூறு: 278)

போர்க்களத்திலிருந்து தனது மகன் ஓடிப்போனான் என்பதைக் கேள்விப்பட்ட தாய் மனவருத்தம் அடைந்தாள். கையில் வாளை ஏந்தி போர்க்களமடைந்த அவள், தனது மகன் புறமுதுகிட்டுச் சென்றிருந்தால் அவனுக்குப் பால் கொடுத்த முலைகளை அறுத்தெறிவேன், எனச் சூளுரைத்தாள். மார்பில் விழுப்புண்ணுடன் செங்குருதிப் படிந்து சிதைந்து கிடந்த மகனின் பிணத்தைக் கண்டவுடன் அவளடைந்த மகிழ்ச்சி, அவனைப் பெற்றெடுத்த காலத்திலும் பெரிதாக விளங்கியது.

போருக்காக ஆணைப் பெற்றுத் தந்துவிட்டு, ஒதுங்கியிருப்பது பெண்ணின் இயல்பல்ல எனப் போதிக்கும் பாடல், மகனின் வீரச் செயலுக்காக மகிழ்வதுதான் தாயின் இயல்பு எனப் புதிய நெறி வகுத்துள்ளது.

போர்க்களத்தில் போராடிய வீரனைப் பகைவர்கள் தாக்கிக் கொன்றனர். வீரமரணம் அடைந்தவனுடைய தாய் அவனுடைய வீரச்செயல் குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். அப்போது அவளுடைய வற்றிய முலைகளில் பால் ஊறிச் சுரந்தன என (புறநானூறு.295) வீரத்தைப் போற்றியுள்ளார் ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா வைரமுத்து

ஆயிரம் தான் கவி சொன்னேன் ....அழகழகா பொய் சொன்னேன்....
பெத்தவளே உன் பெருமை ஒத்தவரி சொல்லலியே ....
காத்து எல்லாம் மகன் பாட்டு....காயிதத்தில் அவன் எழுத்து....
ஊர் எல்லாம் மகன் பேச்சு....உன்கீர்த்தி எழுதலியே....
எழுதவோ படிக்கவோ இயலாததாய் பத்தி
எழுதி என்ன லாபம்ன்னுஎழுதாம போனேனோ....
பொன்னையாதேவன் பெத்த பொன்னே குல மகளே....
என்னை புறம் தள்ள இடுப்பு வலி பொறுத்தவளே....
வைரமுத்து பிறப்பான்னுவயித்தில் நீ சுமந்ததில்ல....
வயித்தில் நீ சுமந்த ஒன்னுவைரமுத்து ஆயிருச்சு.

கண்ணு காது மூக்கோட கருப்பாய்ஒரு பிண்டம்....
இடப்பக்கம் கெடகையில என்னஎன்ன நெனச்சிருப்ப....
கத்தி எடுப்பவனோ ...களவாடபிறந்தவனோ....
தரணி ஆழ வந்திருக்கும்தாசில்தார் இவன் தானோ....
இந்த விவரங்கள் ஏது ஒன்னும்தெரியாம....
நெஞ்சு ஊட்டி வளர்த்த உன்னைநெனச்சா அழுக வரும்....
கத கதனு களி கிண்டி....களிக்குள்ள குழி வெட்டி....
கருப்பட்டி நல்லெண்ணை கலந்து தருவாயே....
தொண்டயிலை அது இறங்கும்சுகமான இளம் சூடு....
மண்டையில இன்னும் மச மசன்னு நிக்குதம்மா....
கொத்த மல்லி வறுத்து வச்சு....குறு மொளகாய் ரெண்டு வச்சு....
சீரகமும் சிறுமிளகும் சேர்த்துவச்சு வச்சு நீர் தெளிச்சு ....
கும்மி அரைச்சு...நீ கொழகொழன்னு வழிக்யையிலே ...அம்மி
மணக்கும்... அடுத்த தெருமணமணக்கும்........
தித்திக்க சமைச்சாலும்....திட்டிகிட்டே சமைச்சாலும்....
கத்திரிக்காய் நெய் வடியும் கருவாடு தேன் ஒழுகும்....கோழி
கொழம்பு மேல குட்டி குட்டியாமிதக்கும்....
தேங்காய் சில்லுக்கு தேகம் எல்லாம் எச்சி ஊறும்....
வறுமையிலை நாம் பட்ட வலிதாங்க மாட்டமல்
பேனா எடுத்தேன் ...பிரபஞ்சம் பிச்சு ஏறுஞ்சேன்....
பாசம் உள்ள வேளையிலே காசுபணம் கூடலியே....
காசு வந்த வேளையிலே பாசம்வந்து சேரலியே....
கல்யாணம் நான் செஞ்சு கதி யத்து நிக்கையிலே
பெத்த அப்பன் சென்னை வந்து சொத்து எழுதி போன பின்னே....
அஞ்சு, ஆறு வருஷம் ...உன் ஆசை முகம் பாக்கமா
பிள்ளை மனம்பித்தாச்சே... பெத்த மனம் கல்லாச்சே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு படிச்சிகிட்டே பணம் அனுப்பி
வச்ச மகன் கை விட மாட்டான்னு
கடைசிவரை நம்பலயே....பாசம்....கண்ணீர்....பழைய கதை
எல்லாமே வெறுச்சோடி போன வேதாந்தம் ஆயிடுச்சே ....
வைகையிலை ஊர் முழுக....வலலூறும் சேர்ந்தழுக ...கை
பிடிச்சு கூட்டி வந்து கரை சேர்த்து விட்டவளே....
எனக்கு ஒண்ணு ஆனதுன்னா உனக்கு
வேறு பிள்ளை உண்டு ...உனக்கு ஒண்ணு
ஆனதுன்னா எனக்கு வேறு தாய் இருக்கா...........?

## தாய்த்திருநாட்டைக் காதலிக்கக் கற்றுக்கொள்

தாயக அரசவைக் கவிஞர் **புதுவை இரத்தினதுரை**

காதலே உன்னதம் காதலே பரிபூரணம் காதலே நேசிப்பின் நிலா
ஆதலால் மானுடனே காதல் செய்வாய்
எதிர்பாலார் மீதான காதலெல்லாம்
வாழ்வில் காமத்தில் கலைந்ததுவே
தோலில் சுருக்கம் விழுந்தவுடனேயே
அதிகமான காதல்கள் அஸ்தமனமாகிறது
காதலிப்பார் அதிகம் வாழ்ந்ததாய் சரித்திரம் இல்லை
இதில் தெய்வீகம் இருப்பதெல்லாம் பம்மாத்து
வேறெதைக் காதலிக்கலாம் மானுடனே?
எம் தாயகத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள்
எமது தமிழீழ மண்ணைக் காதலிக்கக் கற்றுக்கொள்
பெற்றதாய் சுமந்தது பத்து மாதம்
எம் தாய்நாடு சுமந்தது நீண்டகாலம்
அன்னைமடியிலிருந்து கீழிறங்கி
அடுத்த அடியை நீ எடுத்து வைத்தது
எம் தாயகத்தின் நெஞ்சிலே தானே?
அன்றிருந்து மடியும்வரை
எத்தனை எத்தனை எல்லாம் செய்கிறாய்
இறுதியில் புதைந்தோ, எரிந்தோ போவதும்
தாய்நிலத்தின் மடியில் தானே
நிலமிழந்து போனாலும் பலமிழந்து போகோம்
பலமிழந்து போனாலும் இனமழிந்து போகோம்
இனமழிந்து போனாலும் ஈழம் அழிய விடமாட்டோம்
ஆதலால் மானுடனே,
தாய்த்திருநாட்டைக் காதலிக்கக் கற்றுக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே! — எழுச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

அன்னையே! என்றன் தாயே!
அம்மாநீ அடுத்தாரைப் போல்

தின்னவும் காலை நக்கித்
திரியவும் படைத்திடாமல்
என்னையேன் தமிழை எண்ணி
ஏங்கிடப் படைத்தாய்? இங்கே
உன்னரும் பிள்ளை நாளும்
உயிர்துடிக் கின்றேன் தாயே!
கும்பிட்டால் பல்லைக் காட்டிக்
குழைந்தால் நான் குனிந்துபோனால்
நம்பிக்கையோடு மாற்றான் கால்
நக்குவேன் என நாணாது
தம்பட்டம் அடித்தால் நாளை
தாங்கலாம் பதவி கோடி!
வெம்பிப்போய் உலர்கின்றேன் யான்....
வீரமேன் கொடுத்தாய் தேவி?
பாரம்மா.....முன்னாள் என்னைப்
படுக்கையில் அருகே வைத்து

சேரனார் கதை நீ செப்பிச்
சிறியேனைக் கெடுத்ததாலே
பாரம்மா....மாற்றானுக்குப்
பணியான் உன் பிள்ளை....வீதி
ஓரமாய்க் கிடந்தும் காய்ந்தும்
உரிமைப்போர் நிகழ்த்துகின்றான்!
மானத்தின் வடிவே! என்னை
மகவாக ஈன்ற தாயே!
தேனொத்த முலைப்பா லோடும்
தீரத்தை அளித்த தேவி!
ஈனத்தை ஏற்கா நெஞ்சம்
எனக்களித்தவளே! அன்னாய்!
ஊனத்தின் உடல் வீழ்ந்தாலும்
உரிமைப்போர் நிறுத்தேனம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுறி எழடா! — காசி ஆனந்தன்

உன்னை எடுத்தெறி தமிழா!
ஒதிய மரம்போல் நின்றனை பேடி!
அன்னை துடித்திடல் அழகா?
அவள் படுந்துயர் எத்தனை கோடி
தன்னை மறந்தொரு வாழ்வா?
தமிழ்மண் அன்றோ நம்முயிர் நாடி?
முன்னைக் கதைகள் அளப்பாய்...
முண்டம்! எங்கடா மூவேந்தர் பாடி?

மேடைத் தமிழ்விழா வைப்பாய்!
மேனிசிலிர்க்க வெறும்வாய் பிளப்பாய்!
ஓடைத் தவளைபோல் கத்தி
உலகில் என்னதான் பண்ணிக் கிழிப்பாய்?
பாடை உடன்கொண்டு வாடா!
பகைவன் களத்தே விழப்பாய்! அழிப்பாய்!
பீடை தொலைவதெந் நாளோ?
பிள்ளாய் விழிப்பாய்! பிள்ளாய் விழிப்பாய்!

எட்டி உலகினை நீ பார்!
எங்கும் விடுதலை வாழ்வே இருக்கும்!
கட்டி உனைமட்டும் போட்டார்!
கைவிலங் கென்று நொறுங்கிப் பறக்கும்?
தட்டி எழுக உன் தோளை!
தாவுக போரில்! இத்தாய்மண் சிரிக்கும்!
கொட்டி நிறைத்திடு குருதி!
குமுறி எழடா.... விடுதலை பிறக்கும்.

தமிழென் அன்னை! தமிழென் தந்தை!
தமிழென்றன் உடன் பிறப்பு!
தமிழென் மனைவி! தமிழென் பிள்ளை!
தமிழென் நட்புடைத் தோழன்!
தமிழென் சுற்றம்! தமிழென் சிற்றூர்
தமிழென் மாமணித் தேசம்!
தமிழ்யான் வாழும் எழில்மா ஞாலம்!
தமிழே என்னுயிர் மூலம்!
என்றன் தமிழுடல் எழவே எழுவான்
எழுதமிழ் வானின் பரிதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றன் தமிழ்மூச் சென்பது தமிழாம்
எறிவான் இடிபுயல்! அறிதி!
என்றன் தமிழ்நரம் பினிலே பாயும்
எரிதழல் ஆற்றுக் குருதி
என்றன் தமிழை எவன் பழித்தாலும்
எமன் அவனைத் தொடல் உறுதி!
நான் தமிழனடா! நானொரு தமிழன்!
நாற்றிசையும் இது மொழிவன்!
நான் ஒரு வெறியன் எனநகை செய்வோன்
நற்றமிழ் அறியான் இழிஞன்!
நான் உயர்தமிழின் வளமணர் தமிழன்!
நந்தமிழ் எழயான் எழுவன்!
நான் இழிகழுதை அல்லன்..... வலியன்!
நானிலத்தீர்! இது தெளிமின்!

## நீயா தமிழனின் பிள்ளை?

சூடு சொரணை கொஞ்சமும் இல்லை
சொல்லடா நீயும் தமிழனின் பிள்ளை?

தோட்டத்தில் தன்னை அழித்தவன் வீட்டுக்கே
தோரணம் ஆனது வாழை! - நீயும்
நாட்டினில் உன்னை அழித்தவன் காலையே
நக்கினாய் நீ ஒரு கோழை!

கூப்பிட்டுப் பதவி கொடுத்த பகைவனை
கும்பிட்டு வாய்பொத்தி நின்றாய்! - அவன்
சாப்பிட்டு மிஞ்சி எறிந்ததை அன்றோ நீ
சாக்கடை நாய்போலத் தின்றாய்!

தீயவர் தலையை திருக மறந்தாய் உன்
தேசத்தைப் பாரடா! நெருப்பு! - அட
ஆயிரம் பெருமை படைத்த உன் அன்னை மண்
அழியநீ அல்லவா பொறுப்பு?

என்றென்றும் உன்தாய் நிலத்தில் தமிழ்வானில்
இன்னொருவன் கொடி பறக்கும்! - அட
நன்றடா நன்று! இருந்துபார் உன் மண்ணில்
நாளை அவன் பிள்ளை பிறக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயன்பை போற்றும் திரையிசைப்பாடல்கள் சில

**திரைப்படம்: காமராசு**

ஆலயங்கள் தேவையில்லை ஆகமங்கள் தேவையில்லை
தாயின் இதயம் போதும் மனிதா சஞ்சலம் ஏதுமில்லை
ஆலயங்கள் தேவையில்லை ஆகமங்கள் தேவையில்லை
தாயின் இதயம் போதும் மனிதா சஞ்சலம் ஏதுமில்லை
தாய் போன்ற தெய்வமுமில்லை
தாய் இன்றி ஜீவனுமில்லை
தாயின் அன்பு கடனைத் திருப்பி தந்தவர் யாருமில்லை
ஆலயங்கள் தேவையில்லை ஆகமங்கள் தேவையில்லை
தாயின் இதயம் போதும் மனிதா சஞ்சலம் ஏதுமில்லை
தூங்கும் வேளையில் பிள்ளை இருமினால்
துள்ளி எழுந்ததென்னம்மா ஆதி பகலும்தான்
அழுது புலம்பினேன் இருக்கின்றாள் சும்மா
எங்கு சென்ற போதும் என்னை துணையாக அழைப்பாயே
சொர்க்க வாசல் போகும் போது தனியாகச் சென்றாயே
தலையாட்டும் விதியின் கையில்
விளையாட்டு பொம்மை ஆனேன்
தாயின் ஞாபக அலைகள் வீசும் தனிமைத் தீவானேன்
ஆலயங்கள் தேவையில்லை ஆகமங்கள் தேவையில்லை
தாயின் இதயம் போதும் மனிதா சஞ்சலம் ஏதுமில்லை
வெள்ளி நிலவுதான் தொலைவில் இருப்பினும்
வெளிச்சம் பூமியில் வீசும்
உலக உறவுதான் அறுந்த போதிலும் தொடரும் தாய்ப் பாசம்
ஆவியாகும் தண்ணீர் மீண்டும் மழையாய் பூமியைத் தீண்டும்
சோர்ந்த நேரம் மகனின் கனவில் துணையாய் தாய் முகம்
தோன்றும்
ஊராரை ஊட்டி வளர்த்தேன்
ஊரே உன் உறவாய் மாறும்
உன்னைத் தேடும் அன்னை வடிவில் என்னை நீ காண்பாய்
ஆலயங்கள் தேவையில்லை ஆகமங்கள் தேவையில்லை
தாயின் இதயம் போதும் மகனே சஞ்சலம் ஏதுமில்லை
தாய் போன்ற தெய்வமுமில்லை
தாய் இன்றி ஜீவனுமில்லை
தாயின் அன்பு கடனைத் திருப்பி தந்தவர் யாருமில்லை
தாயின் அன்பு கடனைத் திருப்பி தந்தவர் யாருமில்லை
தாயின் அன்பு கடனைத் திருப்பி தந்தவர் யாருமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரைப்படம்: உழைப்பாளி**

அம்மா அம்மா... எந்தன் ஆருயிரே....
கண்ணின் மணியே... தெய்வம் நீயே... ஓ....ஓ....ஓ...ஓ..

அம்மா அம்மா எந்தன் ஆருயிரே
நானும் நீயும் என்றும் ஒருயிரே-இரு
கண்ணின் மணியே ஓ...ஓ....ஓ...ஓ...
தெய்வம் நீயே ஓ...ஓ...ஓ...ஓ...

அம்மா அம்மா எந்தன் ஆருயிரே
நானும் நீயும் என்றும் ஒருயிரே

பூவிழி ஓரம் ஓர் துளி நீரும்
நீ வடித்தால் மனம் தாங்காது
பொன்முகம் கொஞ்சம் வாடி நின்றாலும்
நான் துடிப்பேன் வலி தாளாது

பத்து மாசம் சுமந்து- பட்டபாடும் மறந்து
பிள்ளைச் செல்வம் பிறக்க-அள்ளிக்
கையில் எடுத்த
தாயும் நீயே... தவமிருந்தாயே...

வாடுதம்மா பிள்ளையே....... வாட்டுவதோ.. என்னை நீ..யே.!
அம்மா அம்மா எந்தன் ஆருயிரே
நானும் நீயும் என்றும் ஒருயிரே

பாதைகள் மாறி ஓடிய கன்றை
தாய்ப்பசுதான் இங்கு ஏற்காதா
கூட்டிலிருந்து குஞ்சு விழுந்தால்
தாய்க்குருவி அள்ளிச் சேர்க்காதா

நல்ல காலம் பிறக்க-உன்னை நானும் அறிந்தேன்
உந்தன் கண்கள் திறக்க-இங்குபாடல் படித்தேன்

போதும் போதும்... பிரிந்தது போதும்....
வாடுதம்மா பிள்ளையே... வாட்டுவதோ என்னை நீ..யே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்படம்: அடிமைப்பெண்

தாயில்லாமல் நானில்லை தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள் என்றும் என்னை காக்கின்றாள்

ஜீவநதியாய் வருவாள்
என் தாகம் தீர்த்து மகிழ்வாள்
தவறினைப் பொறுப்பாள்
தர்மத்தை வளர்ப்பாள்
தரணியிலே வளம் சேர்த்திடுவாள்

தாயில்லாமல் நானில்லை

தூய நிலமாய் கிடப்பாள்
தன் தோளில் என்னை சுமப்பாள்
தன்மையில்லாமல் நான் மிதித்தாலும்
தாய்மையிலே மனம் கனிந்திடுவாள்

தாயில்லாமல் நானில்லை

மேக வீதியில் நடப்பாள்
உயிர் மூச்சினிலே கலந்திருப்பாள்
மலைமுடி தொடுவாள்,
மலர்மணம் தருவாள்
மங்கள வாழ்வுக்கு துணையிருப்பாள்

தாயில்லாமல் நானில்லை

ஆதி அந்தமும் அவள்தான்
நம்மை ஆளும் நீதியும் அவள்தான்

**அகந்தையை அழிப்பாள் ஆற்றல் கொடுப்பாள்**
**அவள்தான் அன்னை மகா சக்தி**
**அந்த தாயில்லாமல் நானில்லை**
**தானே எவரும் பிறந்ததில்லை**
**என்க்கொரு தாய் இருக்கின்றாள்**
**என்றும் என்னை காக்கின்றாள்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்படம் – என்னைப் பெத்த ராசா

பெத்த மனசு சுத்தத்திலும் சுத்தமடா
இந்த பிள்ளை மனசு பித்ததிலும் பித்தமடா
தெய்வம் அது தாயுக்கும் கீழ தான்
எந்தன் தாய் அவளும் சாமிக்கு மேல தான்
அந்த தெய்வம் அது தாயுக்கும் கீழ தான்
எந்தன் தாய் அவழும் சாமிக்கு மேல தான்

வேறுங்கைய வீசிக்கொண்டுவிறகு சுமந்து வித்து
இரவா பகல்ல தினம் தினம் உழைச்சதும்
சருகு பொறுக்கி வந்து சாதம் வடித்துத்தந்ததும்
பசியே தெரியா மகனா வளத்ததும்
எத்தன தாயுங்க நம்ம தமிழ் நாட்டிலெ
என் தாயும் அவளப்போல் யாரு இந்த ஊரிலே
தியாகி யாரு தியாகி யாரும் இல்ல போடா
தாயின் கால வணங்கி கும்பிட்டுட்டு வாடா
அவதான் கோயில் அவதான் உலகம் - பெத்த மனசு

மண்ணில் வரும் செடிகொடிகள்எவ்வளவு வகைகள் தான்
மரமோ கொடியோ தண்ணி மட்டும் ஒன்றே தான்
பலவித மரங்கள் என்ன மரத்தில் பழங்கள் என்ன
நிறத்தில் ருசியில் ஒவ் ஒன்றும் வேறதான்
பழமாய் பழுத்ததால் மிளகாய் இனிக்குமா
காயாய் இருப்பதல் கொய்யா கசக்குமா
நல்ல வயிற்றில் பிறந்தா நல்லவனே தாண்டா
கெட்டது செய்ய மாட்டான் வல்லவனெ தாண்டா
அவனே மனிதன் அதை நீ உணரு

பெத்த மனசு சுத்தத்திலும் சுத்தமடா
இந்த பிள்ளை மனசு பித்ததிலும் பித்தமடா
தெய்வம் அது தாயுக்கும் கீழ தான்
எந்தன் தாய் அவளும் சாமிக்கு மேல தான்
அந்த தெய்வம் அது தாயுக்கும் கீழ தான்
எந்தன் தாய் அவழும் சாமிக்கு மேல தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்படம் - நியூ

காலையில் தினமும் கண் விழித்தால்
நான் கைதொழும் தேவதை அம்மா
அன்பென்றாலே அம்மா என் தாய்போல் ஆகிடுமா அம்மா.....

இமை போல் இரவும் பகலும்
எனை காத்த அன்னையே
உனது அன்பு பார்த்த பின்பு அதைவிட
வானம் பூமி யாவும் சிறியது

(காலையில்)

நிறை மாத நிலவே வா வா
நடை போடு மெதுவா மெதுவா
அழகே உன் பாடு அறிவேனம்மா
மசக்கைகள் மயக்கம் கொண்டு
மடி சாயும் வாழைத்தண்டு
சுமையல்ல பாரம் சுகம் தானம்மா
தாயான பின்பு தான் நீ பெண்மணி
தோள்மீது தூங்கடி கண்மணி கண்மணி

(காலையில்)

ஒரு பிள்ளை கருவில் கொண்டு
ஒரு பிள்ளை கையில் கொண்டு
உறவாடும் யோகம் ஒரு தாய்க்கு இன்று
மழலைப் போல் உந்தன் நெஞ்சம்
உறங்கட்டும் பாவம் கொஞ்சம்
தாய்க்கு பின் தாரம் நான் தானய்யா
தாலேலோ பாடுவேன் நீ தூங்கடா
தாயாக்கி வைத்ததே நீயடா நீயடா
தலைவா நீ எந்தன் தலைச்சன் பிள்ளை
பாடுகிறேன் நான் தாலேலோ
அதிசய பூவே தாலோ பொன்மணி தாலேலோ
நிலவே நிஜத்தில் இறங்கி
உனை கொஞ்ச எண்ணுதே
அதிகாலை சேவல் கூவும் அதுவரை
வஞ்சி நெஞ்சில் நீயும் உறங்கிட....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படம்: வியாபாரி

ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்
அம்மாவை வாங்க முடியுமா நீயும்?
அம்மாவை வாங்க முடியுமா நீயும்?
ஆயிரம் உறவு வந்து உன்னை தேடி வந்து நின்னாலும்
தாய் போல தாங்க முடியுமா?
உன்னையும் என்னையும் படைச்சது இங்கே யாருடா?
தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறதுன்னா தாய்டா..
(ஆசைப்பட்ட...)

பட்டினியா கிடைந்தாலும் பிள்ளைக்கு பால் கொடுப்பா
பால் குடிக்கும் பிள்ளை முகம் பார்த்து பசி தீர்ப்பா
இளவட்டம் ஆட பின்னும் எண்ணை தேச்சி குளிக்க வைப்பா
உச்சி முதல் பாதம் வரை உச்சி கோதி மகிழ்ட்ந்திடுவா
நெஞ்சிலே நடக்க வைப்பா
நிலாவை பிடிக்க வைப்பா
பிஞ்சி விரல் நகம் கடிப்பா
பிள்ளை எச்சில் சோறு தின்பா
பல்லு முளைக்க நெல்லு முனையால்
மெல்ல மெல்லதான் கீறி விடுவா
பல்லு முளைக்க நெல்லு முனையால்
மெல்ல மெல்லதான் கீறி விடுவா
உன்னையும் என்னையும் படைச்சதிங்கே யாருடா?
தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறதுன்னா தாயிடா..

மண்ணில் ஒரு செடி முளைச்சா
மண்ணுக்கு அது பிரசவம்தான்
உன்னை பெற துடி துடிச்சா
அன்னைக்கது பூகம்பம்தான்
சூரியனை சுற்றிக்கிட்டு தன்னை சுற்றும் பூமியம்மா
பெத்தெடுத்த பிள்ளை சுத்தி பித்து கொள்ளும் தாய்மையம்மா
கர்ப்பத்தில் நெளிந்த உன்னை நுட்பமாய் தொட்டு ரசிப்பா
பெத்தை போல் அவள் இருப்பா மெத்தையாய் உன்னை வளர்ப்பா
என்ன வேண்டும் இனி உனக்கு?
அன்னை மடியில் சொர்க்கம் இருக்கு
என்ன வேண்டும் இனி உனக்கு?
அன்னை மடியில் சொர்க்கம் இருக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைப்படம்: மன்னன்

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறொன்று ஏது
அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே

அபிராமி சிவகாமி கருமாயி மகமாயி
திருக்கோயில் தெய்வங்கள் நீதானம்மா
அன்னைக்கு அன்றாடம் அபிஷேகம் அலங்காரம்
புரிகின்ற சிறுத்தொண்டன் நான்தானம்மா
பொருளோடு புகழ் வேண்டும் மகனல்ல தாயே உன்
அருள் வேண்டும் எனக்கென்றும் அது போதுமே
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும் நான் உந்தன்
மகனாகப் பிறக்கின்ற வரம் வேண்டுமே.
அதை நீயே தருவாயே

அம்மா என்றழைக்காத ....

பசும் தங்கம் புது வெள்ளி மாணிக்கம் மணிவைரம்
அவை யாவும் ஒரு தாய்க்கு ஈடாகுமா
விலை மீது விலை வைத்துக் கேட்டாலும் கொடுத்தாலும்
கடைதன்னில் தாயன்பு கிடைக்காதம்மா
ஈரைந்து மாதங்கள் கருவோடு எனைத்தாங்கி
நீ பட்ட பெரும்பாடு அறிவேனம்மா
ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும் உழைத்தாலும்
உனக்கிங்கு நான் பட்ட கடன் தீருமா
உன்னாலே பிறந்தேனே

அம்மா என்றழைக்காத .............

நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்ற தாயன்றி வேறொன்று ஏது
அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



**எமது அன்புத்தெய்வம் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து உற்றதுணை நல்கியோருக்கும் ஆறுதல் மொழி பகர்ந்தோருக்கும், பல்வேறு வழிகளில் உதவி புரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள், அயலவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல், சமூக வலைத்தளங்களினூடு துயர் பகிர்ந்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட அன்புள்ளங்களுக்கும், இம்மலர் வெளியிட உதவி ஒத்தாசைகள் புரிந்தோருக்கும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்து கொண்டு பிரார்த்தித்த அனைவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இங்ஙனம்**

**மகன், மருமகள், பேரன், பெறாமக்கள்**

**உறவினர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாகம், சுழிபுரத்தைச் சேர்ந்த

அமரர் சகாதேவன்துரை இரத்தினம்

அவர்களின் ஞாபகார்த்தமாக

இம்மலர் வெளியிடப்பெற்றது

**11.04.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org